**Starting time 12.10. P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 20/2009**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 23.03.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனியப்பன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1-**ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : தாவா தடை உத்தரவுக்காக மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை, அந்த தடத்தில் எங்களுடைய உரிமையை நிலை நாட்டவும் தாக்கல் செய்துள்ளேன். தாவா பாதையில் என்னுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா பாதையில் உரிமை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்து எனக்கு எப்படி வந்தது என்றால், எனது அப்பாவிற்கு கிரயம் மூலம் பாத்தியப்பட்டு எனக்கு வாரிசு அடிப்படையில் வந்தது.

2. எனது அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால், இரண்டு ஆண், ஒரு பெண் வாரிசுகளாகும் மேற்படி எனது அப்பாவின் பெண் வாரிசு மேற்படி சொத்து குறித்து விடுதலைப்பத்திரம் எதுவும் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால், எழுதிக் கொடுத்துள்ளார், அதை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. எனது அப்பா தாவா

சொத்தை ஆறுமுகப்பிள்ளை, பச்சியாப்பிள்ளை என்பவரிடமிருந்து வாங்கினார். தாவா பாதைக்காக மட்டும்தான் வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி தாவா பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால், சர்வே எண் 127/2B1 மற்றும் 127/3A-ல் உள்ளது.

3. வா.சா.ஆ.10 ஆவணமான எனது அப்பா பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தில் தாவா பாதைக்கு சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், சர்வே எண் குறிப்பிடவில்லை, ஆனால் கிரயம் பெற்ற இடத்திலிருந்து வளையமாதேவி செல்லும் தார் சாலை வரை உள்ள பாதையை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பாவிற்கு கிரயம் செய்து கொடுத்த ஆறுமுகப்பிள்ளை, பச்சியாப்பிள்ளையின் மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் நகல் என்பதால் அதை நீதிமன்றத்தில் குறியீடு செய்யவில்லை.

4. மேற்படி பச்சியாப்பிள்ளை ஜெயராமன் என்பவரிடமிருந்து 04.04.1983 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் மூலம் பச்சியாப்பிள்ளை கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். மேற்படி பச்சியாப்பிள்ளைதான் எனது அப்பாவிற்கு எழுதிக் கொடுத்தார் என்றால், அவரும் அவருடைய அப்பாவும் எனது அப்பாவிற்கு கிரயம் செய்து கொடுத்தார்கள். மேற்படி 04.04.1983 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் பச்சியாப்பிள்ளை சர்வே எண் 127/3-ல் 42 செண்ட் நிலமும், சர்வே எண் 127/5-ல் 29 செண்ட் நிலமும், சர்வே எண் 127/4-ல் 18 செண்ட் நிலமும், சர்வே எண்.127/3-ல் 1 செண்ட் நிலமும் கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். அந்த நிலத்தைதான் எனது அப்பா ராமசாமி கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். எனது அப்பா கிரயம் பெற்ற சொத்திற்கு மூலப்பத்திரம் 04.04.1983 தேதியிட்ட கிரயப்பத்திரம் என்றால், சரிதான்.

5. மேற்படி பச்சியாப்பிள்ளை கிரயம் பெற்ற சொத்தை எனது அப்பாவிற்கு விற்க உரிமை உள்ளது என்றால், சரிதான். மேற்படி எனது அப்பா பச்சியாப்பிள்ளையிடமிருந்து கிரயம் பெறும் போது சர்வே எண் 127/2B1 விடுப்பட்டுவிட்டதால் 2009-ஆம் ஆண்டு

அதை நாங்கள் கிரயம் பெற்றுவிட்டோம். 04.04.1983 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் மேற்படி சர்வே எண் 127/2B1 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அதில் இல்லை, ஆனால் சர்வே எண் 127/2B1 பச்சியாப்பிள்ளையின் அப்பா ஆறுமுகத்திற்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி ஆறுமுகப்பிள்ளை 2008-ஆம் ஆண்டு இறந்துவிட்டதால் அருவடைய வாரிசுகளிடமிருந்து மேற்படி சர்வே எண்127/2B1-ல் 2-1/2 செண்ட் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சர்வே எண் 127/2B என்பது ஆரம்பத்தில் ஜெயராமன் என்பவருக்கு உரிமையானது என்றால், சரிதான்.

6. மேற்படி சர்வே எண் 127/2B-ல் உள்ள பாதை குறித்து ஜெயராமனிடமிருந்து மேற்படி ஆறுமுகம் பிள்ளை கிரயம் எதுவும் பெற்றாரா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 ஆவணமான 23.03.1982 தேதியிட்ட கிரய ஆவணம் மூலம் 1- ஆம் பிரதிவாதியின் தந்தை தங்கவேல் ஜெயராமனிடமிருந்து சர்வே எண் 127/2-ல் ஏக்.2.51 செண்ட் நிலம் பூராவும் கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். மேற்படி நெம்பரில் வடபுறம் தென்வடல் 9 அடி கிழமேல் 210 அடி இந்த அளவுள்ள தடத்தில் நீரும், நானும், ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகங்களை ஓட்டிக் கொண்டு போக வர மாமூல் தடப்பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

7. மேற்படி பத்திரத்தில் மேற்படி நிலத்தில் தென்புறம் ஓரமாக கிழமேல் செல்லும் வண்டித்தடத்தில் நீரும், நானும் மற்றும் ராமலிங்க பிள்ளையும் ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகங்களை ஓட்டிக் கொண்டு போக வர மாமூல் தடப்பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ-1-ல் வடபுறம் ஒருபாதையும், தென்புறம் ஒருபாதையும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1-ல் செக்குபந்தி வடிவேல் பிள்ளை நிலத்திற்கும் மேற்கு, வளையமாதேவி செல்லும் ரோட்டிற்கு கிழக்கு, ஆறுமுக கோனார் நிலத்திற்கும் தெற்கு, ராமலிங்கம் நிலத்திற்கு வடக்கு இதன் மத்தியில் 2.51 செண்ட் தடம் உள்பட உள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

8. மேற்படி வா.சா.ஆ.1 செக்குபந்தியில் தடத்தை நீக்கி செக்குபந்தி எழுதப்படவில்லை என்றால், சரிதான், ஆனால் தடம் உட்பட என்று எழுதப்பப்ட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1-ல் தங்கவேலுவுக்கு மட்டும் மேற்படி இரண்டு தடங்களிலும் ஆடு, மாடு மேய்க்க உரிமை உள்ளது என்றும், வேறு யாருக்கும் ஆடு, மாடு மேய்க்க உரிமை இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.1-ல் வடிவேல் பிள்ளை என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால், சரிதான்.

9. எனது அப்பாவிற்கு 09.09.1987 அன்று விற்பனை செய்த பிறது அந்த பகுதியில் ஆறுமுகப்பிள்ளை மற்றும் பச்சியாப்பிள்ளை ஆகியோர்களுக்கு நிலமோ, வேறு இடமோ இல்லை என்றால், சரிதான். ஜெயராமன் பச்சியாப்பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த 04.04.1983 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் மேற்படி நிலங்களுக்கு பாத்தியப்பட்ட மாமூல் வழிநடை பாத்தியங்கள் என்று மட்டும்தான் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் எனது அப்பா கிரயம் பெற்ற வா.சா.ஆ.10 ஆவணத்தில் மூலப்பத்திரத்தில் உள்ளது போல் வழிநடை தடப்பாத்தியம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

10. மேற்படி வா.சா.ஆ-10 ஆவணத்தில் மூலப்பத்திரத்தில் இல்லாத வண்டிப்பாதை குறித்து கூடுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால், வருவாய் ஆவணங்களில் மேற்படி பாதை குறிப்பிடப்பட்டுள்ளதால் அதை குறித்து எங்கள் ஆவணத்தில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது. மேற்படி வண்டித்தட வாசகங்கள் மூலப்பத்திரத்தில் இல்லை என்றால், சரிதான். வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் பாதை உட்பிரிவு செய்யப்பட்டது குறித்தும், வருவாய் துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்தும் பாதை சர்வே எண் குறித்தும மேற்படி வா.சா.ஆ.10 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

11. மேற்படி வா.சா.ஆ-10-ல் உள்ள வண்டித்தடத்திற்கான வாசகங்கள் எனது அப்பாவால் பொய்யாக கூடுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. வண்டித்தடம் இருந்ததைதான் வா.சா.ஆ.10 ல் குறிப்பிட்டுள்ளோம். மேற்படி பாதை எந்த திசையில்

செல்கிறது என்று வா.சா.ஆ.10ல் சொல்லவில்லை என்றால், சரிதான். சர்வே எண் 127/2B-ல் உள்ள பாதை குறித்து தங்கவேல், ஜெயராமன் பச்சியாப்பிள்ளை ஆகியோர் எனது அப்பாவிற்கு எதுவும் எழுதிக் கொடுத்துள்ளார்களா என்றால், மாமூல் வழிநடை பாத்தியம் என்று எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

12. வா.சா.ஆ-2 ஆவணமான கிரயப்பத்திரம் வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பு தடப்பாத்தியத்திற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ-10 ஏற்படுத்திக் கொடுத்த பின்பு 22 ஆண்டுகள் கழித்து அந்த பகுதியில் மேற்படி பச்சியாப்பிள்ளை மற்றும் ஆறுமுகப்பிள்ளைக்கு நிலமோ, வீடோ இல்லாத நிலையில் பெயரளவில் மோசடியாக பாதை பாத்தியம் பெறவேண்டும் என்பதற்காக 07.01.2009 அன்று வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால், சரிதான். 2001-ஆம் ஆண்டு வரை தாவா தடத்தை பற்றி தங்கவேல் பிரச்சனை செய்யவில்லை. 2001-ஆம் ஆண்டிற்கு பிறகு 1-ஆம் பிரதிவாதி பிரச்சனை செய்ததால் மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தை தடப்பாத்தியத்திற்காக நாங்கள் ஏற்படுத்திக் கொண்டோம்.

13. ஜெயராமன் சர்வே எண் 127/2-ல் உள்ள பாதையை வடிவேல் பிள்ளைக்கோ, பச்சியாப்பிள்ளைக்கோ விற்பனை செய்யவில்லை என்றும், மேற்படி இருவருக்கும் அவருடைய நிலத்தை விற்பனை செய்யும் வரை மேற்படி பாதை பாத்தியத்தை அவரிடமே வைத்துக் கொண்டார் என்றும், உரிமை முழுவதும் தங்கவேலுவுக்கு கொடுத்துவிட்டார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ-2 ஆவணம் எழுதுவதற்கு முன்பு சொத்தின் உரிமையாளரான தங்கவேலின் அனுமதியின்றி எனது செல்வாக்கை பயன்படுத்தி வருவாய் ஆவணங்களில் பழைய தேதியில் பொது பாதை செல்வதாக வருவாய் ஆவணமான புல வரைபடத்தில் திருத்தம் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல.

14. மேற்படி வருவாய் ஆவணங்களில் உரிமையில்லாத பச்சியாப்பிள்ளை, வடிவேல் பிள்ளை ஆகியோர்களின் பெயர்களில் கூட்டாக தடம் செல்வதாக தயாரித்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஏற்படுத்திக் கொடுத்தவருக்கு

மேற்படி சர்வே எண் 127/2B1-ல் உரிமை எதுவும் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

1-ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.09 P.M.

ஒப்பம்/- அ.நர்மதாராணி, பி.எஸ்.சி, எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.